# "தலையெழுத்து ; இன்னும் எவ்வளவு நாள்தான் அவதிப்படப் போகிறோமோ!"


## த.வெ.க. ஆட்சி பற்றி ஆசிரியர்கள் புலம்பல்!

சென்னை, ஜூன். 16–

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சியில் அனைத்துத் தரப்பு மக்களும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை, நடைபெற்று வரும் அவலங்களைப் பார்க்கும் போதே தெரிகிறது.

பள்ளி ஆசிரியர்களும் அதற்கு விதிவிலக்கல்ல. த.வெ.க. கட்சியினரால் அவர்கள் எந்த அளவிற்கு பாதிப்பிற்குள்ளாகி வருகிறார்கள் என்பதை 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் 14.6.2026 அன்று வெளியான துணுக்குச் செய்தி ஒன்றை படித்தாலே தெரிந்து கொள்ளலாம்.

அதில் வந்துள்ள செய்தி வருமாறு:-


Schooling the school
Schools usually expect surprise inspections from education officials, not political party functionaries. Teachers at the Government Higher Secondary School in Mampazhapattu got an unexpected civics lesson when a group led by a TVK functionary walked in, questioned the headmaster, interacted with students and announced, "Our rule is beginning now," while advising the staff to "be careful." The classroom briefly turned into a fan club when students were asked if they liked CM Vijay, prompting whistles from many. A senior teacher remarked that even during decades of Dravidian rule, no party cadre had conducted such an inspection. "We do not know what else we are going to face in the coming days," the teacher said. -Bagalavan Perier B

வழக்கமாக பள்ளிகளில் எல்லாம் கல்வி அதிகாரிகள்தான் திடீர் ஆய்வு மேற்கொள்வது வழக்கமாக இருக்கும். அரசியல்வாதிகள் ஆய்வு மேற்கொள்ள மாட்டார்கள்.

ஆனால் மாம்பழப்பட்டு என்ற ஊரில் உள்ள அரசினர் மேல்நிலை பள்ளியில் திடுதிப்பென்று த.வெ.க.நிர்வாகிகள் கூட்டமாக உள்ளே சென்று, அங்கிருந்த தலைமை ஆசிரியரிடம் கேள்வி மேல் கேள்விகள் கேட்டுள்ளனர். அத்துடன் மாணவ - மாணவியரிடமும் பேசி இருக்கின்றனர். 'எங்களின் ஆட்சி தொடங்கி விட்டது' என்று கூறியதுடன் அங்கிருந்த ஆசிரியர்களைப் பார்த்து 'ஜாக்கிரதை' என்று எச்சரித்தும் உள்ளனர்.

வகுப்பறைகள் சில மணித்துளி நேரம் ரசிகர் மன்றங்களாக மாறி விட்டன. 'உங்களுக்கு முதலமைச்சர் விஜய்யை பிடிக்குமா' என்ற த.வெ.க. கட்சியினர் மாணவர்களிடம் கேட்க, பெரும்பாலானோர் விசில் சப்தத்தை எழுப்பி உள்ளனர்.

இதுபற்றி மூத்த ஆசிரியர் ஒருவர் குறிப்பிடும் போது, பல தசாப்தங்களாக இங்கு திராவிடக் கட்சிகள் ஆட்சி செய்து வந்த போதிலும் அக்கட்சியினர் ஆய்வு என்ற பெயரில் பள்ளிகளில் வந்து அலப்பறை செய்ததில்லை. இன்னும் வரும் நாட்களில் என்னவெல்லாம் எதிர் கொள்ளப் போகிறோமோ என்று அங்கலாய்த்தார்.

இவ்வாறு 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டில் வெளியாகி உள்ளது.

ஆரம்பமே இப்படி என்றால்...

## நெடுஞ்சாலைத் துறையில் சாலை பராமரிப்பு நிதி நிறுத்தம் :

# தற்காலிகத் தொழிலாளர்கள் வேலையிழந்து திண்டாட்டம்!

மதுரை, ஜூன் 16–

தமிழக நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவின் கீழ் 40 கோட்டங்கள் செயல்படுகின்றன. துறையின் கீழ் மாவட்டச்சாலை, மாவட்ட முக்கிய சாலை, மாநில நெடுஞ்சாலை, இதரமாவட்ட சாலைகள் என, 73,150 கி.மீ தூர சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த அலுவலகங்களில் தட்டச்சு, தொழில்நுட்ப உதவியாளர், அலுவலக உதவியாளர், சாலை பணி யாளர் என பல்வேறு பணிகளில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு மாதச்சம்பளமாக ரூ.8 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை வழங்கப்பட்டு வந்தது.

தேர்தலில் வெற்றி பெற்றப்பின் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற ஆதவ் அர்ஜூனா, துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் பணிகளுக்காக எவ்வித தொகையையும் வழங்க வேண்டாம் என உத்தரவிட்டார். இதனால், கடந்த மூன்று மாத ங்களாக துறை சார்பில் மேற்கொள்ளப்பட்ட சாலை பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கான தொகை வழங்கப்படாததால், பல மாவட்டங்களில் சாலை சீரமைப்பு பணிகள் முடங்கி கிடப்பதுடன், அவற்றில் ஈடுபடுத்தப்படும் தற்காலிக ஊழியர்களும் வேலை இழந்துள்ளதாக புகார் எழுந்துள் ளது.

### தற்காலிக ஊழியர்கள் பணிநீக்கம்!

நெடுஞ்சாலைத்துறை தற்காலிக ஊழியர்கள் கூறும்போது, "துறையில் உள்ள காலி பணியிடங்கள் நிரப்பப்படாத தால், உதவி கோட்ட பொறியாளர்கள், உதவி பொறியாளர்களுக்கு உதவிடும் விதமாக 5 மாவட்டங்களைச் கொண்ட ஒரு சரகத்திற்கு 500 பேர் வீதம் தமிழகம் முழுதும் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தினக்கூலி அடிப்படையில் பல்வேறு நிலைகளில் பணியமர்த்தப்பட்டிருந்தோம். ஆண்டுதோறும் மாவட்டத்திற்கேற்ப ரூ.50 கோடியிலிருந்து அதற்கு மேல் வழங்கப்படும் சாலை பராமரிப்பு தொகை வழங்கப்படாததால், அந்த பணிகளை மேற்கொள்ள முடியாததுடன், எங்களுக்கு ஊதியமும் வழங்க முடியவில்லை எனக்கூறி, அதிகாரிகள் பணிநீக்கம் செய்துள்ளனர். இதனால், தென்மாவட்டங்களில் மட்டும் 100க்கும் மேற்பட்டோர் பணியை இழந்துள்ளோம். இதே நிலையே மற்ற சரகங்களிலும் நடக்கிறது.

ஒவ்வொருவரும் 5 முதல் 15 ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரிந்த நிலையில், திடீரென எங்களை வேலையை விட்டு நிறுத்தியிருப்பது, வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கி உள்ளது. அரசு இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்' என்றனர்.

நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "சாலை பராமரிப்பு தொகையை பல்வேறு காரணங்களை கூறி அரசு நிறுத்தியுள்ளதால், பல மாவட்டங்களில் சேதமடைந்த சாலை களை சீரமைக்க முடியாமல் திண்டாடி வருகிறோம். பொதுமக்கள் சாலை சேதமடைந்துள்ளதை கண்டித்து எங்களைத்தான் கேள்வி கேட்டு குடைகின்றனர். உயரதிகாரிகளும் எங்களின் கோரிக்கையை ஏற்று அரசிடம் நிதியை ஒதுக்கச் சொன்னபாடில்லை" என்றனர்.

### மாநிலம் முழுக்க வளர்ச்சித் திட்டப்பணிகள் முடக்கம்!

தமிழகத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கான கட்டிடங்கள், அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறை கட்டி டங்கள் கட்டுவது போன்ற பணிகளை பொதுப்பணித்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவு, கட்டுமானப்பிரிவு, மின்னியல் பிரிவு ஆகியவை மேற்கொள்கின்றன. த.வெ.க. அரசின் பொதுப்பணி, நெடுஞ்சாலைகள், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக பொறுப்பேற்ற ஆதவ் அர்ஜூனா பிறப்பித்த உத்தரவால், இத்துறைகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கான பணப்பட்டுவாடா நிறுத்தப் பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது. இதனால் பல இடங்களில் அரசின் வளர்ச்சித் திட்டங்கள் முடங்கி கிடப்பதாக குற்றச்சாட்டுகள் குவிகின்றன.

இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "அமைச்சர் தலைமையில் கடந்த மாதம், துறைரீதி யாக நடந்த முதல் ஆலோசனைக் கூட்டத்தில் மறுஉத்தரவு வரும் வரை எந்த திட்டங்களுக்கும் பணப்பட்டுவாடா செய்ய வேண்டாமென முதன்மை தலைமை பொறியாளர் மூலமாக அனைத்து மண்டல, கண்காணிப்பு மற்றும் செயற்பொறியாளர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக, பணம் பட்டுவாடா வழங்கக் கூடிய இணைய தள முகவரி மற்றும் அடையாள எண் ஆகியவை முடக்கி வைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் அமைச்சர் தலைமையில் நடந்த அனைத்து ஒப்பந்ததாரர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில், 'முடிக்கப்பட்ட பணிகளுக்கு பணப் பட்டுவாடா செய்ய வேண்டுமென' ஒப்பந்ததாரர்கள் கோரிக்கை வைத்தும் அமைச்சர் தரப்பிலிருந்து தற்போது வரை நடவடிக்கை எடுக்கப்படாததால், மாநிலம் எங்கும் பல இடங்களில் பணிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், வளர்ச்சி பணிகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது" என்றனர்.

## நாளை நடைபெறுகிறது!

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. இல்ல மணவிழா!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

**சென்னை, ஜூன் 16–**

**முன்னாள் கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்களின் பேரன் - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.யின் புதல்வர் வி.கே.சித்தார்த்தின் திருமணம் ஜூன்.17 - புதன்கிழமை அன்று சென்னையில், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.**

**கழக முன்னணியினர் பலரும் இம்மணவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.**

**இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:-**



முன்னாள் கழகப் பொருளாளரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான ஆர்க்காடு நா.வீராசாமி - திருமதி. கஸ்தூரி வீராசாமி ஆகியோரின் மகன் வழிப் பேரனும் - வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் - கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி - டாக்டர் ஜெயந்தி கலாநிதி ஆகியோரின் புதல்வருமான வி.கே. சித்தார்த்திற்கும் - சென்னை வாழ் ராமசுப்ரமணியன் சுந்தர் - திருமதி. வித்யா ஸ்ரீசுந்தர் ஆகியோரின் மகளான எஸ்.ஆஷ்ரயா காயத்ரிக்கும் திருமண விழா, நாளை (17.6.2026 - புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் சென்னை - வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடைபெறுகிறது.

மணவிழாவில் - மாவட்டக் கழகச் செயலாளர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ., ஆவடி சா.மு.நாசர், மாதவரம் எஸ். சுதர்சனம், ஆர்.டி.சேகர், நே.சிற்றரசு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் - மணவிழாவிற்கு முன்னிலை வகிக்கிறார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மணவிழாவிற்குத் த லை மை ம யே ற் று , ம ண வி ழ ா வி னை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவில் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் ஐ. பெரியசாமி எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி என். சிவா எம்.பி., ஆ.ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., மு.பெ.சாமிநாதன், அந்தியூர் ப.செல்வராஜ், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன்,

மாவட்டக் கழகச் செயலாளர் எ.வ.வேலு எம்.எல்.ஏ., எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ, மயிலை த.வேலு, தா.மோ.அன்பரசன், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., திருமதி பி.கீதா ஜீவன் உள்ளிட்ட கழக மாவட்டச் செயலாளர்களும், முன்னாள் அமைச்சர்களும், சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களும்,

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், பொன்தனபால் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. நன்றி கூறுகிறார்.

முன்னதாக இன்று (16.6.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

## அறிவகம் — அன்பகம்!




## கும்மிடிப்பூண்டி அருகே 3 வயது பெண் குழந்தை பாலியல் கொடூரத்திற்கு பலி! —

# த.வெ.க. ஆட்சியில் பெண்கள், குழந்தைகளின் பாதுகாப்பு முற்றிலும் கேள்விக்குறி!

## ரீல்ஸ் அரசியலில் மட்டுமே அரசு தீவிரம் என பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கடும் கண்டனம்!

*திருவள்ளூர், ஜூன் 16:*

திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் மூன்று பெண் குழந்தைகள் பாலியல் குற்றங்களுக்கு ஆளான சம்பவங்கள் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த தொடர் சம்பவங்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து பொதுமக்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் கடும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.



கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பேட்டையில் பணிபுரியும் வடமாநிலத்தைச் சேர்ந்த தம்பதியரின் 3 வயது பெண் குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளான நிலையில் முட்புதரில் மீட்கப்பட்டு முதலில் கும்மிடிப் பூண்டி அரசு மருத்துவமனையிலும், பின்னர் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும், சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்தது தமிழகம் முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பிபின் மஞ்சி என்பவரை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்த சிறுமிக்கு விரைந்து நீதி கிடைக்க வேண்டும்; குற்றவாளிக்கு சட்டத்தில் உள்ள மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அதேபோல், பூவிருந்தவல்லி அருகே வசிக்கும் கூலித் தொழிலாளி தம்பதியரின் 7 வயது மகள், வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த போது பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதாக பெற்றோர் அளித்த புகாரின் அடிப்படையில், அதே பகுதியைச் சேர்ந்த சரவணன் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. ஆரம்ப கட்டத்தில் மகளிர் காவல்துறையினர் அலட்சியமாக செயல்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதனுடன், திருவள்ளூர் அடுத்த திருப்பாச்சூர் பகுதியைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் நந்தகுமார், அதே பகுதியைச் சேர்ந்த அரசு உயர்நிலைப் பள்ளியில் 7ஆம் வகுப்பு படிக்கும் மாணவியிடம் கஞ்சா போதையில் அடிக்கடி பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. மாணவி அளித்த புகாரின் அடிப்படையில் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் நந்தகுமாரை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரே நாளில் திருவள்ளூர் மாவட்டத்தில் மூன்று பெண் குழந்தைகள் பாலியல் குற்றங்களுக்கு ஆளான சம்பவம் பெற்றோர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகளை பள்ளிக்கும், வீட்டின் வெளியிலும் பாதுகாப்பாக அனுப்ப முடியாத சூழல் உருவாகி வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவங்களை சுட்டிக்காட்டி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மாநில அரசை கடுமையாக விமர்சித்துள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த அரசு, அந்த அடிப்படை பொறுப்பையே நிறைவேற்றத் தவறி விட்டதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ள னர்.

மாநிலம் முழுவதும் பெண்கள், சிறுமிகள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொட ர்ச்சியாக நடைபெற்று வரும் நிலையில், குற்றத் தடுப்பில் அரசு போதுமான கவனம் செலுத்தவில்லை என்றும், சட்டம்ஒழுங்கை வலுப்படுத்துவதற்குப் பதிலாக ரீல்ஸ், விளம்பரங்கள், நிகழ்ச்சி அரசியல் மற்றும் சமூக வலைதளப் பிரசாரங்களிலேயே ஆட்சியாளர்கள் அதிக ஆர்வம் காட்டுவதாகவும் எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ள "சிங்கப்பெண்" சிறப்புப் படை தரையில் எந்த அளவுக்கு செயல்படுகிறது என்பது குறித்து அரசு மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் வகையில் அதன் செயல்பாடுகளை வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மூன்று வயது குழந்தை கூட பாதுகாப்பாக வாழ முடியாத நிலை ஏற்பட்டிருப்பது மாநிலத்தின் சட்டம்ஒழுங்கு நிலைமை குறித்து கடுமையான கேள்விகளை எழுப்புவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன. ஒவ்வொரு சம்பவத்திற்குப் பிறகும் வழக்குப் பதிவு செய்து கைது நடவடிக்கை எடுப்பது மட்டுமே தீர்வாக இருக்க முடியாது; குற்றங்கள் நடைபெறுவதற்கு முன்பே அவற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளே அரசின் முதன்மைப் பொறுப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கும்மிடிப்பூண்டியில் உயிரிழந்த 3 வயது சிறுமியின் குடும்பத்திற்கு உரிய இழப்பீடு, சட்ட உதவி மற்றும் முழுமையான அரசு ஆதரவு வழங்கப்பட வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட மற்ற சிறுமிகளுக்கும் மருத்துவம், உளவியல் ஆலோசனை, சட்ட உதவி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு என்பது எந்த அரசுக்கும் முதன்மையான பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தவறினால், சட்டம்ஒழுங்கு குறித்து மக்கள் அரசிடம் கடுமையான கேள்வி களை எழுப்புவது இயல்பானது. விளம்பரங்களையும் ரீல்ஸ் அரசிய லையும் விட, மக்களின் உயிர் மற்றும் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நேரம் இதுவே என தெரிவித்துள்ளன.

கும்மிடிப்பூண்டியில் பாதிக்கப்பட்டவருக்கு நீதி வழங்க வேண்டும், குற்ற வாளிகள் மீது உடனடி மற்றும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்திய காவல்துறையினர், பின்னர் சாலை மறியலில் ஈடுபட்டவர்களை கைது செய்து அப்புறப்படுத்தினர்.

இதற்கிடையில், சம்பவ இடத்திற்கு வந்த த.வெ.க. நிர்வாகிகள் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது.



முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103–வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி திருவள்ளூர்மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் ஆலோசனைப்படி, பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய செயலாளர் பி.டி.சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவுகள் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முரளி சேனா, நிர்வாகிகள் பி.டி. குமரேசன், வி.வி. மணி, ஆர். மணிகண்டன், எம். செல்வம், பி.டி. ராஜேந்திரன், ஆரோன், சம்பத், பிச்சிகான், கிரி, விமல், பாஸ்கரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கலைஞருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.